For Private Circulation Only

ஜனவரி 2011 மலர் 5 இதழ் 1

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

India ECHOES ONE WORLD ONE HUMANITY


# 2012 புது வருட வாழ்த்துக்கள்



சில நாட்களாக, வானிலையில் ஈரப்பதமாகவும், மந்தமாகவும் இருந்த நிலை மாறி, தெளிவான வானத்துடன் 2012 ஜனவரி முதல் நாள் உதயமானது. கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழை, சுற்றுச்சூழலில் புத்துணர்வை ஏற்படுத்தி இருந்தது. அன்புக்குரிய மாஸ்டரை தரிசிக்க ஆவல் மிக்கவர்களாகவும் தம் பொறுப்புக்களை நினைவு கூர்ந்து அவற்றினை புத்துணர்வுடன் துவங்க உறுதிபூண்டவர்களாகவும் இருந்த அப்யாசிகளினால் ஆசிரமம் நிரம்பி இருந்தது. சத்சங்கம் ஆரம்பித்தபோது வானிலை தெளிவாக இருந்தது. ஆனால், மாஸ்டர் 'That's all' என்று கூறியவுடன் மழை பெய்ய ஆரம்பித்தது. தூரலாக ஆரம்பித்தது, கனமழையாகப் பெய்யத் தொடங்கியது. தியானகூடத்தில், எங்களுடன் தங்கி நேரம் செலவழிக்கவேண்டிய கட்டாயம் மாஸ்டருக்கு ஏற்பட்டது. சகோ.சக்ரபாணி தமிழில் பேசும்போது, ஒரு குழந்தை தன் தாயின் உதவியோடு, தன் முதல் அடியினை எடுத்து வைக்கின்றபோது, அதனைக்கண்டு அக்குழந்தையின் தாய் எவ்வாறு மகிழ்ச்சி அடைகின்றாரோ , அதே போன்று, மாஸ்டர் நம் வளர்ச்சிக்கு உதவி செய்து நாம் வளர்ச்சியடைவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார் என்றார். மேலும் அவர் கூறுகையில், நாம் வளர்ந்த பின்பு, மாஸ்டருக்கு தொந்தரவு தராமல், அல்லது அவருக்கு கவலைகளை அளிக்காமல், நம்மை நாமே கவனித்துக்கொள்ள முடியும் என்றும், ஆன்மீக பாதையில் ஒரு பொறுப்பு மிக்க முதிர்ச்சி அடைந்த நபராக மாஸ்டர் முன்பு நம்மை வெளிப்படுத்துவதுதான் நம் முதன்மையான கடமை என்றார். சகோதரி நிஹாரிகா, அனைவரின் இதயங்களும் மாஸ்டருக்கான அன்பில் நிரம்பும் வகையில், அவருடைய கவிதைகள் சிலவற்றினை வாசித்தார். மழை தொடர்ந்து பெய்தது. ஆனால், மாஸ்டர் அவருடைய குடிலுக்குத் திரும்பினார்.

மாஸ்டர், அன்று முழுவதும் பல குழுக்களாக வந்த அப்யாசிகள் பலரை சந்தித்ததன் மூலமாக, கூடுதலான சிரமத்தினை ஏற்றுக்கொண்டார். அவருடைய இரவு உணவுக்கான நேரத்தின் போது, அவர் முழுமையாக களைப்படைந்து இருந்ததை, ஒருவரால் தெளிவாகக் காண முடிந்தது. இரவு உணவுக்குப் பின்னரும், அவர் சில குழந்தைகளைச் சந்திக்க நேரம் எடுத்துக்கொண்டார். அன்றைய நாள் முடிவில், அவர் ஓய்வு எடுக்கச் செல்ல வேண்டிய நேரத்திலும், அலுவலகத்துக்குச் செல்ல முடிவு செய்து, 30 நிமிடங்களுக்கும் மேலாக மின் அஞ்சல்களைப் பார்த்து, அதற்குரிய பணியினை செய்தார். நாம் அனைவரும் கண்டு, மிக்க ஆர்வத்துடன் பின்பற்றுவதற்குரிய, ஒரு பூர்ண உதாரண புருஷராக அவர் வாழ்ந்து வருகிறார். நம்மை நாமே கேட்டுக்கொள்ளவேண்டிய கேள்வி என்னவெனில், நாம் "அவருடைய காலடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறோமா?" என்பதுதான்.

## பாபுஜியிடம் இருந்து அன்புடன் வரப்பெற்ற செய்தி



2011 டிசம்பர் 22 ம் தேதி, மாஸ்டருக்கு அனுப்பப்பட்ட பாபுஜியின் செய்தியில், மாஸ்டரின் வாழ்க்கை முறையில் ஒரு மாற்றத்தைச் செய்ய வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. இதன் காரணமாக, மாஸ்டர் தன் வட இந்திய சுற்றுப்பயணத்தை ரத்து செய்துள்ளார். அவரைக் காண வரும்பும் அனைவருக்காகவும், இனி அவர் மணப்பாக்கத்தில் தங்கி இருப்பார். பாபுஜியின் செய்தி தொகுப்பு பின் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இந்த பல வருடங்களாக, நீங்கள் உங்களை அதிக அளவில், முழுமையாக அர்பணித்துள்ளீர்கள். உங்கள் வாழ்க்கை முறையினை மாற்றிக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. உண்மையில் மிகுந்த களைப்படைந்துள்ள உங்கள் பௌதீக உடலுக்கு, இனி இது பொருத்தமானதாக இருக்கப்போவதில்லை. உங்களுடைய உடலுக்கு இயன்ற அளவு அனைத்துப் பாதுகாப்பும் தேவை: ஓய்வு, அமைதி, மேலும் உங்களுடைய தெய்வீக சுயத்திற்கு முழுமையான கவனம் தேவைப்படுகிறது.

... அதிகபட்சமாகவே உங்களை நீங்கள் அர்பணித்துள்ளீர்கள். உங்களுக்கு மேலும் என்ன வேண்டும்? தற்போதைய நிலையில் பயணங்கள் இனித் தேவை இல்லை. உங்கள் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் எந்தவிதமான அச்சுறுத்தலையும், எங்களால் அனுமதிக்க முடியாது. இது இன்றைய அறிவுரை; இது எங்களுடைய அன்பின் உச்சக்கட்ட வெளிப்பாடு. ஏனெனில், உங்களுக்கு நலத்தினைக் கொடுக்கும் விஷயங்கள்தான், மற்ற எல்லாவற்றையும் விட எங்களுக்கு மிகவும் முக்கியமானது."

(Please refer to the original version in the English newsletter.)



## மாஸ்டரின் சுற்றுப்பயண அறிக்கை

### மும்பை

மாஸ்டர் அக்டோபர் 22ம் தேதி மாலை, துபாயில் இருந்து வந்தவுடன், நேரடியாக ஆசிரமத்திற்குச் சென்றார். விழாக்கால உணர்வு அங்கு இருந்தது. மாஸ்டர் ஆசிரம வாசலைக் கடந்து செல்லும் போது, பல்வேறு பாடல்கள் அவரை வாழ்த்தி வரவேற்றன.



பாரம்பரிய வரவேற்பிற்குப் பிறகு அவர், தரைதளத்தில் புதிதாக கட்டப்பட்டிருந்த புத்தக விற்பனைக் கூடத்தினையும், நூலகத்தினையும், இரண்டாவது தளத்தில் புதிய குடிலினையும் திறந்து வைத்தார். மாஸ்டர் அவ்விடத்தை வலம் வந்து, தனது திருப்தியை வெளிப்படுத்தினார். ஒரு இரவு மட்டும் தங்கி, ஞாயிற்றுகிழமை காலை சத்சங்கத்தை நடத்த அவர் வந்திருந்தாலும், மேலும் ஒரு நாள் தங்கி மூன்று சத்சங்கங்களை ஆசிரமத்தில் நடத்த, நள்ளிரவில் தீர்மானித்தார்.

அக்டோபர் 23, ஞாயிற்றுகிழமை காலை 9.00 மணி சத்சங்கத்தை மாஸ்டர் நடத்தினார். பிறகு அவர், தனது வாரிசான சகோ.கமலேஷ் பட்டேலை அறிமுகப்படுத்தினார். அறிமுகப்படுத்தும்போது பாபுஜியின் சொற்றொடரான, 'எனக்கு பிறகு ஒருவர் இருப்பார்' என்பதை குறிப்பிட்டார். மேலும் மாணவர்களுக்கு ஆசிரியர்களை தேர்ந்து எடுக்கும் வாய்ப்பு கிடைப்பதில்லை எனவே கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி அந்த ஆசிரியரிடமிருந்து மிக அதிகமாக கற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

சகோ.கமலேஷ், கூட்டத்தில் உரையாற்றினார். அப்போது அவர், 'ஒரு அப்யாசியாக, நாம், மாஸ்டர் நமக்கு சிட்டிங்கின் போது அளிக்கும் நிலையை உணர நம்மை மாற்றினோமா, அந்நிலையை உணர்ந்து அதை நாம் உள்வாங்கினோமா, உள்வாங்கியபிறகு அதனை தக்கவைத்துக்கொண்டோமா மேலும் அந்நிலையை நம்முடன் நாம் எடுத்துச்சென்றோமா' என கேள்வி எழுப்பினார்.

சகோ.கமலேஷின் உரையைத் தொடர்ந்து, மும்பை அப்யாசிகள் ஏற்பாடு செய்திருந்த கலை நிகழ்ச்சி நடைபெற்றது. மாலை 5.00 மணி சத்சங்கத்தை தொடர்ந்தும் ஒரு கலை நிகழ்ச்சி நடைபெற்றது. சாதாரணமாக நடந்த ஒரு கலந்துரையாடலில், மாஸ்டர் அப்யாசிகளை "மாயை"யில் சிக்கிக்கொள்ளாமல் இருக்கும்படி அறிவுறுத்தினார். அப்போது ஒரு அப்யாசி, அதனில் சிக்காமல் இருப்பது எப்படி என்று கேள்வி எழுப்பியபோது, அவர், பிரார்த்தனை மட்டுமே அந்நிலைக்கு ஒரே தீர்வு என்று கூறினார்.

அக்டோபர் 24 அன்று காலை 7.30 மணி சத்சங்கத்திற்கு பிறகு, அப்யாசிகளின் கட்டுப்பாட்டையும், மேலும் அவர்களின் நிலையையும் பாராட்டினார். பிறகு அவர் மும்பைக்குப் புறப்பட்டார். அங்கே அவர், ஒரு சகோதரரின் இல்லத்தில் தங்கினார். மற்றும் மாலை சத்சங்கத்தை நடத்தினார். அக்டோபர் 25 காலை மாஸ்டர் அகமதாபாத் புறப்பட்டார்.

## அகமதாபாத்:

தீபாவளி மற்றும் குஜராத் வருடப்பிறப்பின் போது, மாஸ்டரின் மேற்குஇந்தியப் பகுதி பயணம், குஜராத்தில் உள்ள அனைத்து அப்யாசிகளுக்கும் ஒரு சிறப்பு பரிசாக அமைந்தது. மதியப்பொழுதில் அவர் வந்தடைந்தபோது, ஏறத்தாழ 500 அப்யாசிகள் மண்டல ஆசிரமத்தில் கூடி அவரை வரவேற்றனர். சிறிது நேர ஓய்விற்குப் பிறகு, 3000 அப்யாசிகள் கலந்து கொண்ட மாலை சத்சங்கத்தை நடத்தினார். தொடர்ந்து, சிறிய உரை நிகழ்த்திய போது, தனது பயணத்தின் முக்கிய நோக்கம், தனது வருங்கால பிரதிநிதியாகிய சகோ.கம்லேஷ் பட்டேலை அறிமுகப்படுத்தவே ஆகும் என குறிப்பிட்டார்.

மறுநாள் தீபாவளி தினத்தன்று, சகோ.கமலேஷ் சத்சங்கத்தை நடத்தினார். சத்சங்கத்திற்கு பிறகு, சகோ. குருபிரீத் பாடிய அழகான பஜனைகள் அனைவரையும் பேரின்ப நிலைக்கு அழைத்து சென்றன. மாலை, எல்லா இடங்களிலும் வைக்கப்பட்டிருந்த, ஆயிரக்கணக்கான வண்ண விளக்குகளாலும், மின் விளக்குகளாலும், ஆசிரமம் முழுவதும் ஒளிர்ந்தது. மாலை சத்சங்கத்திற்கு பிறகு, வதோதரா மற்றும் அகமதாபாத் அப்யாசி மகளிரால், பாரம்பரிய கார்பா நடனம் நிகழ்த்தப்பட்டது. தெய்வீக அன்பு அலை அச்சூழ்நிலையை ஊடுருவுவதை ஒவ்வொருவரும் உணர்ந்தனர்.

அக்டோபர் 27 குஜராத்தின் வருடப்பிறப்பு ஆகும். அன்று, பாரம்பரிய வழக்கப்படி, மூன்று சிறுவர்கள் மாஸ்டருக்கு 'சப்ராஸ்' வாழ்த்த, உப்பை அவரிடம் எடுத்துச் சென்றனர். கோல்ப் ஊர்தியின் மூலம், தியான மண்டபத்திற்கு செல்லும் வழியில், அவரை வாழ்த்த வரிசையில் காத்திருந்த ஏறத்தாழ நூறு குழந்தைகளை சந்தித்தார். அதனை தொடர்ந்து அவர், சத்சங்கம் நடத்தினார். மேலும், அகமதாபாத்தை சேர்ந்த மணமக்களுக்கு திருமணம் நடத்திவைத்தார்.

**மாஸ்டரின் கலந்துரையாடலில் இருந்து எடுக்கப்பட்ட சில முத்துக்கள்:**

- யாராவது ஒருவர் தன்னை மாஸ்டரிடம் அறிமுகம் செய்யும்போது, நெருக்கமான மற்றும் அன்பிற்குரியவர்களுக்கு அறிமுகம் தேவையில்லை என்று கூறினார்.

- முடிவுகள் பற்றி மாஸ்டரிடம் கேள்வி எழுப்பப்பட்டபோது, அப்யாசிகளிடத்தில், முடிவுகளை எதிர்பார்ப்பது அதிகரித்து வருவது தவறு என பதிலுரைத்தார். நாம் முழு மனதுடன் வேலை செய்தாலே போதும்.

- யாரோஒருவர், வாழ்க்கையில், சௌகரியம் விளைவிக்கும் சாதனங்கள் பயன்படுத்துவது சரியா என வினவினார். சௌகரியங்கள் இல்லாமல் ஒருவன் வாழ முடியாது என்பது தவறானது என்று அவர் கூறினார். ஆனால் நாம் ஆன்மீகத்தைக் கருத்தில் கொள்ளும் பொழுது, எந்த வகையிலும் நாம் சௌகரியங்களைப் பயன்படுத்தக் கூடாது. அவை நமக்கு எளிதில் கிடைக்கக் கூடியது என்றாலும் கூட, அது வளைந்து கொடுக்காத, மற்றும் தவறான அணுகுமுறை







அகமதாபாத்



ஆனந்த்



வதோதரா

ஆகும். நாம் பற்றற்றும் இருந்து, அதன் மூலமாக, அனைத்து சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென அவர் விளக்கிக் கூறினார்.

மாலை சத்சங்கத்திற்குப் பிறகு, அகமதாபாத் மையத்தின் அப்யாசிகளால், இரண்டு அற்புதமான நிகழ்ச்சிகள், வழங்கப்பட்டன. அவற்றில் ஒன்று, துறவி நர்சிங் மேத்தா அவர்களின் வாழ்க்கை பற்றிய நாடகமாகும். மற்றொன்று, விளக்கு நடனம் ஆகும். மாஸ்டர், இந்நிகழ்ச்சிகளை அவரது தங்குமிடத்தில் இருந்தபடியே, CCTV இணைப்பின் மூலமாக பார்த்துப் பாராட்டினார்.அப்பொழுது மாஸ்டர், மகிழ்ச்சியுடன் இருந்தார். பிறகு அந்நிகழ்ச்சியில் பங்கேற்ற இளைஞர்களுடன் சிறிது நேரத்தைக் கழித்துவிட்டு, பிறகு அவர் ஓய்வெடுக்கச் சென்றார்.

28ந் தேதி அன்று காலை 6.30 மணிக்கு மாஸ்டர் ஆனந்த் (அகமதாபாத்தில் இருந்து 75 கி.மீ.)க்குப் புறப்பட்டுச் சென்றார். 1000 க்கும் மேற்பட்ட அப்யாசிகள் அவருடன் வந்திருந்தார்கள். ஆனந்தில் அவர் ஒரு சத்சங்கம் நடத்தினார். அன்றைய நாளை ஒரு சகோதரருடைய வீட்டில் கழித்தார். ராஜஸ்தான், மத்திய பிரதேசம், மற்றும் மகராஷ்டிரா ஆகிய மூன்று மாநிலங்களைச் சேர்ந்த குறிப்பிட்ட சில நிர்வாகிகளுக்கும், மற்றும் குஜராத்தைச் சார்ந்த அனைத்து பிரிபெக்ட்களுக்கும், உலகளாவிய சேவைக்குழுவின் பணிமுகாம் ஒன்று நடத்தப்பட்டது.

29ந் தேதி அன்று, ஆனந்தில் சத்சங்கத்தை முடித்துவிட்டு, மாஸ்டர் வதோதரா ஆசிரமத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். வாரத்தின் இறுதி நாட்களில் மாஸ்டருடன் இருப்பதற்காக, ஏறத்தாழ 2500 அப்யாசிகள் அங்கு குழுமியிருந்தனர். 29 ந் தேதி அன்று மாலையும், 30 ந் தேதி அன்று காலையும், மாலையும் மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். வதோதரா மையத்தினைச் சார்ந்த அப்யாசி சகோதரிகள் மற்றும் குழந்தைகள், இரண்டு நடனங்களை அரங்கேற்றினர். நவம்பர் 1ந் தேதி காலை 7.30 மணிக்கு மாஸ்டர் தனது தங்குமிடத்தினுள், ஒரு சத்சங்கம் நடத்தினார். பிறகு அகமதாபாத்திற்கு திரும்பச் சென்று, நவம்பர் 2ந் தேதி மாலை 3.20 மணிக்கு, சென்னைக்குப் புறப்பட்டார்.



## சென்னை

ஒரு நீண்ட பயணத்தை முடித்துவிட்டு மாஸ்டர் சென்னை திரும்பினார். கடுமையான போக்குவரத்து நெரிசலின் காரணமாக, அவர் ஆசிரமத்திற்கு சற்று தாமதமாக வந்தடைந்தார். மேலும் களைப்புடனும் காணப்பட்டார். இருப்பினும், அடுத்த நாள் காலை அவர் சீக்கிரமாகவே எழுந்து, 6.00 மணிக்கெல்லாம் தயாராக இருந்தார். அவர், " நான் காலை 5 மணிக்கு எழுந்துவிட்டேன். களைப்பாக இருந்ததால் காலை 7.00 மணி வரை தூங்கலாம் என்று நினைத்தேன். ஆனால், பிறகு தான் அது களைப்பல்ல, சோம்பேறித்தனம் என்பதை உணர்ந்து, அதை உதறிவிட்டு எழுந்து விட்டேன்" என்று கூறினார். இந்த வயதிலும், அதிலும் குறிப்பாக ஒரு நீண்ட பயணத்திற்குப் பிறகும், தன்னுடைய களைப்பையும் பொருட்படுத்தாமல், தனக்குத்தானே புத்துணர்ச்சியூட்டுகின்ற வகையில் தனது சங்கல்ப சக்தியைப் பிரயோகித்து, அவரால் எழ முடிந்திருக்கின்றது. இது நம் அனைவருக்கும் ஒரு மிகப் பெரிய பாடமாகும்.

மாஸ்டர், தனது சமீபத்திய பயணத்தின் போது பெற்ற புத்தகங்களை, ஆசிரம நூலகத்திற்கு, தனது அறைக்கு, ஒமேகா பள்ளிக்கு, மற்றும் சத்கோல் ஆசிரமத்திற்கு என ஒவ்வொன்றாக வகைப்படுத்திக் கொண்டிருந்தார். தன்னார்வத் தொண்டர்கள், புத்தகங்களின் தலைப்பை வாசித்து, மாஸ்டருக்கு உதவி புரிந்து கொண்டிருந்தனர். தேவை மற்றும் பொருத்தத்தின் அடிப்படையில், புத்தகங்களை கவனத்துடன் அவர் வகைப்படுத்திக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

நவம்பர் 5 ம் தேதி வாக்கில், சென்னையில் பலத்த மழை பெய்தது. மாஸ்டரின் குடில் இருக்கும் இடத்திற்கு, சிங்கம் இருக்கும் நுழைவாயில் வழியாக நீர் வரத் தொடங்கியதால், வெள்ளம் வருவதற்கான அபாயம் இருந்தது.

தண்ணீர் நுழைவாயிலின் வழியே உள்ளே வருவதை, அப்யாசி தன்னார்வ தொண்டர்கள் மணல் மூட்டைகளை அடுக்கி



தடுத்தனர். மாஸ்டர் கவலையடைந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, புத்தக அலமாரிகளின் கீழ் அடுக்கை காலி செய்து, அட்டை பெட்டிகளில் வைத்து கட்டி, அவற்றை உயரமான இடங்களுக்கு கொண்டு செல்லுமாறு தன்னார்வ தொண்டர்களுக்கு வழிகாட்டினார்.

நவம்பர் 7-ம் தேதி மாலையில், மொரிஷியசிலிருந்து வந்திருந்த அப்யாசிகளுடன் ஒரு சந்திப்பை நடத்தினார். அவர் ஒரு சிட்டிங் அளித்தும் மற்றும் அவர்களுடன் பேசியும், சிறிது நேரத்தை அந்த அப்யாசிகளுடன் கழித்தார். அப்பொழுது அவர், "ஒருவர் தான் சாதித்து விட்டதாக எப்பொழுதும் கருதக்கூடாது. அனைத்தும் நம்மை அடுத்த விஷயத்திற்கு அழைத்து செல்கின்றன. எப்பொழுதும் இந்த நடைமுறைக்கு உண்மையாக முடிவு என்பதே இங்கு இல்லை." என்று கூறினார்.

நவம்பர் 11-ந் தேதி, மாஸ்டர், 9மணிக்கு சத்சங்கம் அளித்து, பின்னர் பதிமூன்று திருமணங்களை நடத்தி வைத்ததால், சிறப்பான நாளாக அமைந்திருந்தது. தியானக்கூடம் நிரம்பியிருந்தது. மேலும் அனைத்து அப்யாசிகளும், அன்புக்குரியவரை அருகிலேயே பார்ப்பதற்கான ஒரு வாய்ப்பாக அமைந்தது. மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவியதை, ஒருவரால் உணர முடிந்தது. மாஸ்டர் மிகவும் மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தார்.

மாஸ்டருடன் இருந்து, தங்களுடைய நேரத்தைச் செலவிட, ஷாஜஹான்பூரிலிருந்து வந்திருந்த 25-30 அப்யாசிகளை மாஸ்டர் சந்தித்தார். அந்த சந்திப்பை மாஸ்டர் சிட்டிங்குடன் தொடங்கினார். அனைவரும் சாப்பிடுவதற்காக சிற்றுண்டி தயார் செய்யப்பட்டிருந்தது. அனைவருக்கும் சிற்றுண்டி கிடைத்துவிட்டதா என்பதை மாஸ்டர் உறுதி செய்து கொண்டார். மாஸ்டர் முழுமையான விருந்தோம்புபவராக இருந்தார். அனைத்து அப்யாசிகளும் தொடர்ச்சியாக மாஸ்டரை ஷாஜஹான்பூர் மையத்திற்கு வருமாறு அழைத்தனர். "நான் உறுதியாக வருகிறேன்" என்று மாஸ்டர் பதிலளித்தார். அதன்பின்னர், மாஸ்டர் ஷாஜஹான்பூர் உட்பட, உத்திரபிரதேசத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், ஒரு முறை சென்று வர திட்டமிட்டார். ஆயினும், மாஸ்டருக்கு ஒரு வாரத்திலேயே மூன்று முறை உடல்நலம் குன்றிவிட்டது. அதன் விளைவாக, அவரது அனைத்து பயணத் திட்டங்களையும் ரத்து செய்துவிட்டு, மணப்பாக்கத்திலேயே தங்கி இருந்தார்.

ஒருநாள் காலையில், மாஸ்டர், அவரது பிரசன்னத்தில் அமர்ந்திருந்த அனைத்து அப்யாசிகளுக்கும் சிட்டிங் கொடுக்க முற்பட்டபோது, "சபலத்தை தவிர்ப்பதற்கான சிறந்த வழி என்னவென்றால், சபலத்திற்குரிய இடத்தில் இல்லாமல் இருக்க வேண்டும். நீங்கள் ஜிலேபி சாப்பிட வேண்டும் என்ற சபலத்தில் இருக்கிறீர்கள், நீங்கள் ஜிலேபி கடையில் இருக்கும் பொழுது, நிச்சயமாக சபலமடைவீர்கள், ஆகையால், சபலமேற்படுத்த காரணமாக இருக்கும், அந்த இடத்தில் இல்லாமல் இருப்பது தான் சிறந்த வழியாகும்" என்று கூறினார்.

நவம்பர் 27ம் தேதி கனமழை இருந்த பொழுதும், மாஸ்டர் சத்சங்கம் வழங்க தயாராக இருந்தார். ஆசிரமத்தில் மீண்டும் வெள்ள பெருக்கு ஏற்பட வாய்ப்பு எழுந்த பொழுது, மாஸ்டர் அதை நினைத்து கவலையுற்றார். அவர், "இந்த ஆசிரமத்தை கட்டும்பொழுது, என்னிடம் இன்னும் பணம் இருந்திருந்தால், ஆசிரமம் முழுவதையும் சில அடி உயரம் உயர்த்தியிருப்பேன்" என்று கூறினார். அவர் அதற்கு விளக்கம் கொடுத்த தருணத்தில், ஒவ்வொருவராலும் அவரின் எளிமையையும், உண்மைத்தன்மையும் உணர முடிந்தது.

சமீபத்தில் அமெரிக்காவிலிருந்து மீண்டும் இந்தியாவிற்கே திரும்பிய ஒரு தம்பதியினர் மாஸ்டரை சந்தித்தனர். மாஸ்டர் அந்த பெண்ணிடம் "மீண்டும் இங்கே வந்ததற்கு எடுத்த முடிவு உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறதா?" என்று கேட்டார். அதற்கு மதிப்பளித்து அந்த பெண் "நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் மாஸ்டர்" என்று கூறினார். மாஸ்டர் "அங்கே நீங்கள் பணத்தை பெற முடியும், இங்கே நீங்கள் மகிழ்ச்சியை பெற முடியும், பணமும் மகிழ்ச்சியும் எப்பொழுதும் ஒன்றாக இருக்காது" என்று கூறினார்.


நவம்பர் 29-லிருந்து டிசம்பர் 2 வரை மாஸ்டர் காயத்ரியில் இருந்தார். வெள்ளி அன்று மாஸ்டர் கடற்கரைக்கு சென்றார். அப்பொழுது அவருக்கு ஏற்பட்ட மூச்சுத்திணறலால், மீண்டும் வீட்டுக்கு வந்து ஓய்வெடுத்துக் கொண்டார்.

டிசம்பர் 3, 2011: மாஸ்டர் காலை 9.15 மணிக்கு ஆசிரமம் வந்து சேர்ந்தார். மகாபாரத கதையின் குறுந்தகடுகள் (டிவிடி) அடங்கிய தொகுப்பு ஒன்று கிடைக்கப் பெற்றார். அது அந்த உயர்ந்த காப்பியத்தின் இரண்டாவது பகுதியாகும். அசலான மகாபாரதத் தொடரில் விட்டுப்போயிருந்த பல பகுதிகளை அது கொண்டிருந்தது. மாஸ்டர் அவற்றை பார்க்க வேண்டும் என்ற தீவிர ஆர்வத்தை வெளிப்படுத்தினார்.

டிசம்பர் முதல் வாரத்தில், குஜராத்திலிருந்து 300 அப்யாசிகள், மாஸ்டருடன் இருப்பதற்காக, ஆசிரமம் வந்திருந்தனர். ஒரு மாலை வேளையில், இத்தாலியில் இருந்து வந்திருந்த இருபது அப்யாசிகள், மாலை சத்சங்கம் முடிந்து ஒன்றாக வந்து, மாஸ்டரை சந்திப்பதற்காக வரவேற்பறையில் பொறுமையாக காத்திருந்தனர். ஒருவித சூழ்நிலை உருவானதை உணர முடிந்தது. தனது வேலையை செய்வதற்காக மாஸ்டர் அலுவலக அறைக்கு செல்ல திட்டமிட்டிருந்தார். ஆனால், அவரது படுக்கை அறையிலிருந்து வெளியே வந்து, தனது திட்டத்தை மாற்றி, வரவேற்பு அறையிலேயே அமர்ந்து, இத்தாலியில் இருந்து வந்திருந்த அப்யாசிகளுடன் பேச தொடங்கிவிட்டார். அவர்களிடம் சிறிது நேரம் பேசிவிட்டு,வந்திருந்த அனைவரும் மகிழ்ச்சி அடையும் விதமாக, மாஸ்டர் அவர்களுக்கு சிட்டிங் வழங்கினார்.

வாரக்கடைசியில் 10 மற்றும் 11-ந் தேதிகளில் நடைபெற்ற, 'இதயத்திலிருந்து பேசுதல்' பயிற்சி முகாமில் எழுந்த ஒரு கேள்வி, மாஸ்டர் முன் வைக்கப்பட்டது. அது, "நாம் இதயத்திலிருந்து பேசுங்கள் என்று சொல்கிறோம், அது நாம் தயார்செய்துகொண்டு வராமல் உடனடியாக பேச வேண்டும் என்பதை குறிக்கின்றதா?" என்பதாகும். அதற்கு மாஸ்டர், எந்த ஒரு உரைக்கும், தயார்செய்தல் என்பது அவசியமானது. பேசுவதற்கு இரண்டு, மூன்று நாட்கள் முன்னரே, அந்த தலைப்பை உங்கள் மனதிற்குள் கொண்டு செல்ல அனுமதித்து, உள்ளுக்குள்ளேயே சமைக்க வேண்டும். மேற்கத்திய நாடுகளில் செய்வதைப் போல, என்ன சொல்ல வேண்டுமோ அதனுடைய முக்கிய குறிப்புகளை எழுதி வைத்துக் கொள்ளக் கூடாது. அது நம்முடைய செயல்பாட்டை கடினமானதாகவும், நெகிழ்வுத்தன்மையற்றதாகவும் மற்றும் உடனடித் தேவையை இழந்ததாகவும் இருக்கும். அதற்கு பதிலாக, எளிமையாக அந்த தலைப்பை உங்களுக்குள்ளே நிலைநிறுத்தி, உங்களுக்குள்ளேயே சென்று தயார்படுத்துதலை செய்ய வேண்டும். உரை வழங்க வேண்டிய நேரம் வரும்பொழுது, உங்களால் நிச்சயமாக இதயத்திலிருந்து பேச முடியும். இதயத்திலிருந்து பேசுதல் மட்டும் போதுமானதல்ல, ஒருவர் தன்னுடைய உரையை, உயிரோட்டம் உள்ளதாக ஆக்கவேண்டும் என்று அவர் கூறினார்.





15-ந்தேதி, மாஸ்டர் காயத்ரியிலிருந்து, ஓங்கோல் மைய அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்துவதற்காகவே, அந்த ஒரு நாள் மட்டும், வந்தார்.

## 19 டிசம்பர் 2011

தென்னாப்பிரிக்கா மற்றும் ஓஷியானாவைச் சேர்ந்த அப்யாசிகள், கருத்தரங்கில் கலந்து கொள்ள, ஆசிரமம் வந்திருந்தனர். மாஸ்டர் அவர்களில் பலரைக் காலை 8:30 மணியிலிருந்து 11:30 மணி வரை சந்தித்தார். அவர் களைப்புற்றிருந்த போதிலும், ஒவ்வொருவரையும் சந்திக்க விரும்பினார். இது வரை, 350 அப்யாசிகளில் சுமார் 300 அப்யாசிகளை சந்தித்திருப்பேன் என வேடிக்கையாக குறிப்பிட்டார். மாலை, சுமார் 50 அப்யாசிகள், அவருக்காக கூடத்தில் காத்திருந்தனர். மாஸ்டர் அலுவலக அறையிலிருந்து வெளி வந்து, அவர்களிடம், "தயவு செய்து பொறுமையாக இருங்கள். நான் சில நிமிடங்களில் வந்துவிடுவேன்" என்று கூறினார். பிறகு அவர் வந்து, அனைவருக்கும் சிட்டிங் அளித்தார். ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பொறுமையாக காத்திருந்த அனைவரும் மிக்க மனநிறைவுற்றனர்.

## 24 டிசம்பர் 2011

மாஸ்டர் ஆசிரமத்திற்கு வந்து, வெளியே வெயிலில் அமர்ந்தார். அவர், பாபூஜி மகராஜிடமிருந்து கடைசியாக வந்திருந்த செய்தியைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். இந்த செய்தி வந்த போது, எவ்வாறு தான் மேற்கொள்ள வேண்டிய பயணத்திற்காக எல்லாவற்றையும் திட்டமிட்டு, பயணச்சீட்டை முன் பதிவு செய்ய முடிவெடுத்திருந்தார் என்பதைப் பற்றி விளக்கினார். பின்பு, அவரது மாஸ்டரின் ஆணைக்கு கீழ்ப்படியும் பொருட்டு, எல்லாவற்றையும் ரத்து செய்ய வேண்டியிருந்தது.

கிறிஸ்துமஸ் முன் தின மாலையானதால், ஒரு அப்யாசி குழுவினர், கிறிஸ்துமஸ் கரோல் பாடல்களை பாடிக்கொண்டிருந்தனர். மாஸ்டரும், தன் படுக்கை அறையை விட்டு வெளியே வந்து, அவர்களுடன் பாடலை முணுமுணுக்க, யாவரும் களிப்புற்றனர். அப்பாடலை கடைசியாக CRESTல் கேட்டதை நினைவு கூர்ந்தார். எல்லோருடனும் அவர் சிறிது நேரம் செலவிட்டார். பாடியவர்களுக்கெல்லாம் இனிப்பு மிட்டாய் வழங்கினார்.

கிறிஸ்துமஸ் தினத்தன்று, மாஸ்டர் தியான மண்டபத்திற்கு சென்றார். அப்பொழுது, வழி நெடுக சிறுவர், சிறுமியர், சிவப்பு மற்றும் வெள்ளை உடையணிந்து நின்று அவரை வரவேற்றனர். அவர், தன் கோல்ஃப் வண்டியில் மிக நிதானமாக சென்று, அவர்களைப் பார்த்து மிக்க மகிழ்ச்சியுற்றார்.

## 26 டிசம்பர் 2011

தன் பயணம் வரையறைக்கு உட்பட்டதால், மாஸ்டர், நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் 9 மணி சத்சங்கம் நடத்த தீர்மானித்துள்ளார். அவர், தியான மண்டபத்தில் ஒவ்வொருவரையும் கூடுமானவரை சந்திப்பதாகவும், அவரது குடிலில் கூடுவதை தவிர்க்கும் படியும் கூறினார்.

ஒரு காலை சத்சங்கத்திற்கு பின், மாஸ்டர் வெயிலிலமர்ந்து வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அவர், "ஏன் 50 வயதிற்கு பின் மன உறுதி தோல்வி அடைந்து விடுகிறது? ஏனென்றால், நம்முடைய சுய முன்னேற்றத்திற்காக மன உறுதியை பயன்படுத்தவேண்டிய போது, நாம் அவ்வாறு செய்வதில்லை. அதற்குப் பதிலாக, நம்முடைய ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள மட்டுமே மன உறுதியைப் பயன்படுத்துகிறோம். அது நமது மன உறுதியை வலுவிழக்கச்செய்துவிடுகிறது" என்று கூறினார். அவர் ஒரு குழந்தையின் உதாரணத்தைக் கூறி, "நீங்கள் ஒரு குழந்தையை, பொம்மை கடைக்கு கூட்டிச் சென்றபின், அதன் ஆசையை கட்டுப்படுத்திக்கொள்ளக் கூறக் கூடாது" என்றார். தனது சொந்த உதாரணத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர், தனக்கு ஒரு வருடம் முன்பு, காலையில் எழுந்திருக்க முடியாமல், அதிக நேரம் தூங்கியதாகவும், அதன் பின் மன உறுதி பூண்டு, இப்பொழுதெல்லாம் காலை 4:30 - 5:00 மணி அளவில் எழுந்து விடுவதாகவும் குறிப்பிட்டார். "என் வயதையொத்தவர்கள், மிகவும் தளர்வுற்றவர்களாக காணப்படுவார்கள். என் மன வலிமையினால் மட்டுமே நான் இயங்கிவருகிறேன். வழக்கமாக, ஓரிரண்டு சிட்டிங்குகள், பிரபெக்ட்டுக்கான ஓரிரண்டு சிட்டிங்குகள், பின் என் மின் அஞ்சல்களை, அதுவும் ஒரு சில அல்ல, சுமார் 40 மின் னஞ்சல்களை வழக்கமாகப் பார்க்கிறேன்" என்று கூறினார்.

கிழக்கு கடற்கரையில் ஒரு சூறாவளி உருவாகியதைத் தொடர்ந்து, நகரத்தில், பலத்த காற்றும் மழையும் கொட்டியது. ஆசிரமம் முழுவதும் மழையினால் நிரம்பி வழிந்தது. அப்யாசிகள் மணப்பக்கம் வரத்தொடங்கியதால், அவர்கள் இச்சூழ்நிலையில், அங்கு வரவேண்டாம் என சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. அதிர்ஷ்டவசமாகப் புயல் கடந்துவிட்டதால் எல்லாம் சகஜ நிலைமைக்கு திரும்பின.







## மொரிஷீயஸ் அப்யாசிகளுக்கான கருத்தரங்கு:

2011 நவம்பர் 7 முதல் 14 வரை

நவம்பர் 6-ம் தேதியன்று, மணப்பாக்கம் ஆசிரமத்திற்கு 27 அப்யாசிகள் மற்றும் 8 குழந்தைகள் கொண்ட குழு வருகை புரிந்தது. மாஸ்டர், அந்த அப்யாசிகளை நவம்பர் 7 அன்று, தன்னுடைய காட்டேஜில் வரவேற்று, மாலை 4.45 மணிக்கு சிட்டிங் வழங்கினார். அதனைத் தொடர்ந்து அவர்களுக்கு தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

அனைத்து அப்யாசிகளும், அந்த கருத்தரங்கின் பொழுது, இரண்டு தனி சிட்டிங்குகளைப் பெற்றனர். 8-~ம் தேதியிலிருந்து 13-~ம் தேதி வரை, நடைபெற்ற கருத்தரங்கில், சுய பிரதிபலிப்புக்குப் பொருத்தமான கருத்துக்களும், மற்றும் குழு கலந்துரையாடல்களும் இருந்தன. சகஜமார்க்க பயிற்சியைப் பற்றிய சகோ. டாலி மற்றும் பயிற்சி குழுவின் கருத்துரையுடன், அது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. குழுக் கலந்துரையாடல்களில், ஒவ்வொரு அப்யாசியும் தலைப்பை புரிந்து கொண்டு, தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தும் வாய்ப்பைப் பெற்றனர். வெவ்வேறு குழுக்களிலிருந்தும் தொகுப்புரைகள் வழங்கப்பட்டன. பிற்பகல், மாஸ்டரின் வீடியோ உரைகள் ஒளிபரப்பப்பட்டன.

சகோதரர்கள் V. கண்ணன், A.P. துரை மற்றும் கம்லேஷ் பட்டேல் ஆகியோர், சகஜ மார்க்கத்தை புரிந்து கொள்ளக் கூடிய வகையிலும், அவர்களின் பரிணாம வளர்ச்சியை நோக்கி செயல்படுவதை ஊக்குவிக்கும் வகையிலும், மொரிஷீயசில் சகஜ மார்க்கத்தை பரவச் செய்ய, செயல் பட வேண்டிய வகையிலும் உரையாற்றினர். சகோ. ஷரத் அவர்களால் சமுதாய கட்டமைப்பு பற்றிய தொகுப்புரை வழங்கப்பட்டது. மொரிஷீயசில் எடுக்கப்பட வேண்டிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டு, அவை ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சகோ. கமலேஷ் அவர்களின் உரையின் பொழுது, வீட்டிற்கு திரும்பி சென்றாலும் நல்ல சூழ்நிலையை எவ்வாறு தக்க வைத்துக் கொள்வது என்று நிறைய அப்யாசிகள் கேட்பதாகக் கூறினார். நாம் அந்த நிலையை வளர அனுமதிக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டினார். மாஸ்டர், நமது இதயங்களில் ஒரு ஆன்மீக மூலதனத்தை முதலீடு செய்துள்ளார் என்றும், நாம் அதை வளர அனுமதிக்கவேண்டும். அந்த நிலைமை வளர்ந்து, நமது எண்ணங்கள், பேச்சு மற்றும் செயல்பாடுகளில் வெளிப்பட வேண்டும். மேலும் அவர், புதிய அப்யாசிகளை மிஷனிற்கு அழைத்து வந்து, அவர்களுக்கு தொடர்ச்சியாக வழிகாட்ட வேண்டும் என்பது, ஒவ்வொரு அப்யாசியின் பொறுப்பு என்றும் கூறினார்.

நவம்பர் 14 அன்று அப்யாசிகள் சிறிது நேரம் மாஸ்டரை சந்தித்தனர். மாஸ்டர் அவர்களின் நீண்ட பயணத்திற்கு வாழ்த்து தெரிவித்தார். தன்னுடைய வயதின் காரணமாக தன்னால் மொரிஷீயஸ் வரமுடியாது என்றார். ஆனால் அனைவரிடமும் "என்னை உங்களுடன் அழைத்து செல்லுங்கள். நான் எதைக் கூறுகிறேன் என்று உங்களுக்குப் புரிந்திருக்கும் என நான் நம்புகிறேன்" எனக் கேட்டுக் கொண்டார். இது, நாம் எல்லா சமயங்களிலும், அவருடனே இருக்க வேண்டும் என்பதையே நினைவூட்டுகிறது.

## ஓஷியானா மற்றும் தென் ஆப்பிரிக்கா கருத்தரங்கு

2011 டிசம்பர் 16- 22

"நான் எப்பொழுதும் அவருடையவனாகவே இருக்கிறேன். ஆனால், அவர் என்னுடையவராக இருக்கிறாரா?"

பங்கேற்பாளர்கள் வந்து, இரண்டு நாட்களாகியும், மாஸ்டரை பார்க்க முடியவில்லை. உள்ளே அவரைப் பார்த்து, அவர் இருப்பதை உணர வேண்டும் என்பது அமைதியான செய்தியாக இருந்தது. அக்கருத்தானது, மாஸ்டரை உள்ளே பார்க்க வேண்டும் என்பதன் உண்மையான பொருளை வெளிப்படுத்தி, "அவர் என்னுடையவர் என நம்மால் முழுமையாக ஏற்றுக் கொள்ள முடிகிறதா?" என்பதை கேட்க வைத்தது.

18-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை, மாஸ்டர் சத்சங்கம் வழங்கினார். ஊக்கப்படுத்தும் பேச்சாளர்களின் உரைகளுடன், செயல்பாடுகள் தொடங்கின. சகோ. சந்தோஷ் "இதயத்திலிருந்து பேசுதல்" குறித்து பேசினார். மாஸ்டர் விரும்புவது போல், நாம் அனைவரும் அவருடையதைப் போன்ற எதிர்கால நோக்கில் பங்கேற்பாளர்களாக இருக்க வேண்டுமென்றும், தனியாக நம்முடைய சொந்த நோக்கில் இருக்கக் கூடாது என்றும் கூறப்பட்டது. அடுத்த நாள், சகோ. கிருஷ்ணா சகோதரத்துவத்தை பற்றி பேசுகையில், நமது மாஸ்டருடைய அலைவரிசையில், நம்முடைய அலைவரிசை, அதே அதிர்வெண்ணைக் கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டினார். சகோ. கமலேஷ் ஒழுங்கான, முறையான பயிற்சியை மையப்படுத்தி பேசினார்.

டிசம்பர் 21 அன்று, மாஸ்டர் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்திற்கான AGM-ல் கலந்து கொண்டார். அப்பொழுது அவர், நாம் குறிப்பிட்ட தேசத்தைச் சார்ந்தவர் என்ற தடையை உடைத்து, அனைவரும் ஒன்றாக வேண்டியதன் அவசியத்தைக் கூறினார். நம் கற்பனை, மற்றும் உண்மை நிலை குறித்து மாஸ்டர் கூறுகையில், எப்பொழுதும் ஆஸ்திரேலிய கடற்கரையின் வழியாக ஓட்டிச் செல்ல அவர் விரும்புவதாகவும், ஆனால், உண்மை என்னவென்றால், வயதாகிவிட்டதால் அவரால் பயணிக்க இயலாது என்பதும்தான். எனவே, நமது வாழ்வில் மனதில் நினைப்பது என்ன என்பதையும், உண்மை நிலை என்ன என்பதையும், தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். பங்கேற்பாளர்களுடன், மாஸ்டர் இரவு உணவு உண்டார். அவர்களுக்கென்று பிரத்யேகமாக பர்கர் மற்றும் வறுவல் ஏற்பாடு செய்யபட்டு இருந்தது.

ஓஷியானியா மற்றும் தென் ஆப்பிரிக்கா இளைஞர் கருத்தரங்கு, 17-20 தேதிகளில் நடைபெற்றது. 'அவரது அடிச்சுவடுகளில் நடத்தல்' என்ற ஆய்வுப் பொருளில் சுமார் 80 இளைஞர்கள் பங்கேற்றனர். நியூசிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் தென் ஆப்பிரிக்காவில் இருந்தும், ஒரு சிலர் இந்தியாவிலிருந்தும் கலந்து கொண்டனர்.

4நாள் கருத்தரங்கில், உரைகள், செயல்பாடுகள் மற்றும் சத்சங்கங்கள் இருந்தன. இறுதி நாளன்று, ஒவ்வொரு குழுவும் ஒரு சிறிய நாடகம், பாடல் அல்லது செயல்பாடுகளை நடத்தி காட்டினர். இதயபூர்வமான பேச்சு, தங்களை வெளிப்படுத்திக் கொள்ள ஒவ்வொருவருக்கும் உதவியாக இருந்தது. நாம் அனைவரும் ஒன்றே என்ற உணர்வு மேலோங்கியது. கருத்தரங்கில் கலந்து கொண்ட இளைஞர்கள் கலந்துரையாட, கருத்துக்களை பகிர்ந்து கொள்ள மற்றும் ஒவ்வொருவரின் கண்ணோட்டத்தையும், அறிந்து கொள்ள தங்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்ததாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். அவர் நாம் என்னவாக வேண்டும் என நினைக்கிறாரோ, அவ்வாறு ஆதல், ஒன்றிணைந்து இருத்தல், அன்புடன் ஒன்றிணைந்து வேலை செய்தல் ஆகியவை, முக்கிய நோக்கமாக இருக்கும்.



## அப்யாசிகளின் கருத்துருவாக்கம்

### ராஞ்சி, ஜார்க்கண்ட்

அக்டோபர் 28, 2011 அன்று, ராஞ்சி மைய அப்யாசிகளின் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ராஞ்சி அப்யாசிகளின் தரம் மற்றும் எண்ணிக்கையை மேம்படுத்துவதற்கான வழிகள் பற்றி கலந்துரையாடும் பொருட்டு, அப்யாசிகள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். அந்த குழுக்கள் பல செயற்குறிப்புகளை எடுத்துரைத்தனர். தனி சிட்டிங்குகளை முறையாக எடுத்துக்கொள்ளவும், பண்டாராக்களில் முறைப்படி கலந்துகொள்ளவும், ஞாயிறு சத்சங்கங்களில் தவறாமல் கலந்துகொள்ளவும் அப்யாசிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. முன்கூட்டியே சீராகத் திட்டமிடப்பட்டு ஏற்பாடு செய்யப்படும் முழுநாள் நிகழ்ச்சிகள் மற்றும் இல்லக்கூட்டங்களை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சி, 'அன்புடன் சேவை' என்பது பற்றி சகோதரர் ராகேஷ் மற்றும் சகோதரி காஞ்சன் ஆகியோர் ஆற்றிய சிற்றுரைகளுடன் நிறைவுபெற்றது.

## இல்லக்கூட்டங்கள்

### துர்காபூர், மேற்கு வங்கம்



நவம்பர் 13, 2011 அன்று, 'சகஜ மார்க்க பயிற்சி மற்றும் முறை' பற்றிய கலந்துரையாடலுக்காக சகோதரி அனிதா ஜெயின், சகோதரர் அருண் லத்தியா, சகோதரர் பரிமள் மற்றும் துர்காபூரில் வசிக்கும் பிற அப்யாசிகள், சகோதரர் N. P. சக்கரவர்த்தியின் வீட்டில் ஒன்றுகூடினர். சகஜ மார்க்க பயிற்சி மற்றும் அப்யாசிகளின் தரத்தை மேம்படுத்தும் பணி ஆகியன பற்றிய பல்வேறு தலைப்புகள் மீதான கலந்துரையாடல்கள் பல வினாக்களை எழுப்பின. இவை திறம்பட தெளிவாக்கப்பட்டன. மொத்தத்தில், மாஸ்டரின் தெய்வீக அருள் மற்றும் ஆர்வம் மிக்க அப்யாசிகளின் பங்கேற்பினால் இது முழு திருப்தியளித்த ஒரு நிகழ்ச்சியாக இருந்தது.

### நாசிக், மகாராஷ்டிரா

டிசம்பர் 8, 2011 அன்று சகோதரர் சுனில் சந்திரனின் வீட்டில் நடந்த கூட்டத்தில் ராணுவ அதிகாரிகள், அவர்களது மனைவிகள் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் அடங்கிய பன்னிரண்டு பேர்கள் கலந்துகொண்டனர். இதில், சகஜ மார்க்கத்தின் முக்கியத்துவம் மற்றும் அது எவ்வாறு ஒரு சமன்பட்ட ஜீவிதத்துடன்கூடிய ஆன்மீகப் பரிணாம வளர்ச்சியடைவதில் ஒரு மனிதனுக்கு உதவுகிறது என்பது பற்றி நாசிக் மையப் பொறுப்பாளரான சகோதரி அனசுயா ராமச்சந்திரன் அவர்களால், வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் எடுத்துக்காட்டுகளுடன் விரிவாக விளக்கப்பட்டது. பங்கேற்பாளர்கள் ஆன்மீகத்தின் அநேக அம்சங்கள் மீது மிகுந்த ஆர்வம் காட்டியதால், தனிப்பட்ட அனுபவங்கள் பற்றிய வினாக்கள் மற்றும் சந்தேகங்கள் நிறைய இருந்தன. பல பங்கேற்பாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க உள்ளூர் பிரிசெப்டர்களின் தொடர்பு விவரங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

## எளிதாக்கப்பட்ட பயிலரங்கங்கள்

### மும்பை, மகாராஷ்டிரா



"விஷயத்தை விட நடத்தையே அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்."

அக்டோபர் 1 2011, அப்யாசிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவதில், 'எளிதாக்கல்'-ஐ ஒரு திறம்பட்ட செயல்முறையியலாக பயன்படுத்துவது குறித்து, இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 65 ஒருங்கிணைப்பாளர்களுக்கு ஒரு தீவிர பயிற்சியளிக்கப்பட்டது. இந்த முறையானது சிறு குழுக்களாக பணிபுரிவதை ஊக்குவித்து, அதனால் தன்னம்பிக்கையை உருவாக்குகிறது. பரஸ்பர நம்பிக்கை மற்றும் மரியாதை நிறைந்த ஒரு சூழல் உருவாக்கப்பட்டு, அதன் விளைவாக ஒவ்வொரு பங்கேற்பாளரினுள்ளும் ஒரு திறந்த நிலை ஏற்படுவதை எளிதாக்குகிறது. கலந்துரையாடலின் தரம் சூட்சுமமாக (ஒலிபெருக்கியின் முன் ஆற்றப்படும் உரைகள் போல அல்லாது) இருப்பது ஆசிரமச் சூழலுக்கு உகந்ததாக இருக்கிறது.

இந்த முறையைப் பயன்படுத்தி மும்பை மற்றும் பூனாவைச் சேர்ந்த ஒருங்கிணைப்பாளர்கள் குழு 'தகவல் பரிமாற்றம் மற்றும் சகோதரத்துவம்' என்ற தலைப்பிலான இரண்டு பயிலரங்குகளை - ஒன்று பொதுவாக அப்யாசிகளுக்காகவும் (நவம்பர் 20, 65 பங்கேற்பாளர்கள்) மற்றொன்று பிரிசெப்டர்களுக்காகவும் (டிசம்பர் 4, 36 பங்கேற்பாளர்கள்), நடத்தியது.

அநேக கலந்துரையாடல்கள், சகோதரத்துவ முறையிலான தகவல் பரிமாற்றத்திற்கான யோசனைகளைப் பயன்படுத்திய, 8-12 பங்கேற்பாளர்கள் கொண்ட சிறு குழுக்களில் நடந்தது. உள்முக ஆய்விற்காக பயன்படுத்தப்பட்ட விஷயங்கள் பெரும்பாலும் நமது மாஸ்டர்களின் படைப்புகளிலிருந்தும், 'ஒளியுலகிலிருந்து மென்குரல்கள்' தொகுப்பிலிருந்தும் எடுக்கப்பட்டன. அநேக பங்கேற்பாளர்களிடமிருந்து வந்த பின்கருத்து நேர்மறையாகவே இருந்தது. இது, சகோதரத்துவத்தை உணர்தல் குறித்த கற்றுக்கொள்ளுதலாகவே இருந்தது; யோசித்தல்/அறிதலுக்கு மிகக் குறைந்த முக்கியத்துவமே அளிக்கப்பட்டது.



## பிரதிபலிப்பிற்கான ஒரு நேரம்



### வாஹி, மும்பை

மும்பை, வாஹி பகுதியிலும், அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள அப்யாசிகள், மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமையன்று ஒன்றுகூடிச் சந்திக்கின்றனர். சகோ. ரமணய்யாவின் இல்லத்தில் நடைபெற்ற முதல் சந்திப்பு, 'பிரார்த்தனை' என்பதைப்பற்றியதாக இருந்தது. இத்தலைப்பைப் பற்றி, குழுக்கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு, முக்கியமான அம்சங்கள் குறித்துக் கொள்ளப்பட்டன. பங்கேற்ற ஒவ்வொருவரும், படித்து, அதைப்பற்றிச் சிந்தித்து, ஒன்று அல்லது இரண்டு நிமிடங்களுக்குப் பேசினர். ஆழ்ந்த, இதயம் நிறைந்த பத்து நிமிடப் பிரார்த்தனை தியானத்துடன் நிகழ்ச்சி முடிவடைந்தது.

இத்தகைய நிகழ்ச்சிகளை, வெவ்வேறு அப்யாசிகளின் இல்லங்களில், ஒவ்வொரு முறையும் வெவ்வேறு தலைப்புகளுடன் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நிகழ்ச்சிகள் முதலில், சகஜ மார்க்கப் பயிற்சிமுறை பற்றியும், அதன்பின், சகஜ மார்க்கப் போதனைகளின் நேர்த்தியான அம்சங்களைப் பற்றியும் இருக்கும்.

### குல்பர்க்கா, வடகர்நாடகா

நவம்பர் 7தேதியன்று, சகோ. மகேஷ் தேஷ்பாண்டேயின் இல்லத்தில் சுமார் 20 அப்யாசிகள் கலந்து கொண்ட ஒரு ஒன்றுகூடல் நிகழ்ச்சி நடைபெற்றது. 'குறிக்கோளுடன் கூடிய முறையான பயிற்சி' என்ற மாஸ்டரின் உரைக்குப்பின்பு, உலகளாவிய பிரார்த்தனை இருந்தது. இதைத் தொடர்ந்து, தேநீர் நேரத்தில், அப்யாசிகள் பொதுவாகக் கலந்துரையாடி, ஒருவருடன் ஒருவர் சாதாரணமாகப் பழகினர். நிகழ்ச்சி முழுவதும் சுமுகமான, ஆனந்தமான சூழல் நிலவியது. அனைத்து அப்யாசிகளும், மாஸ்டரின் பிரசன்னத்தை உணர்ந்தனர்.



### வதோதரா, குஜராத்

2011, டிசம்பர் 17ம் தேதியன்று, வதோதராவின், சுந்தர்வன் சொஸைடியில், 'பொறுமையே நல்ல பண்பு' என்பதைப்பற்றிக் கலந்துரையாடி, அதைப் பிரதிபலிக்கும் பொருட்டு, அப்யாசிகளின் குழு ஒன்று கூடியது. இரண்டு நிமிடங்கள், அமைதியாக மாஸ்டருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு, முந்தைய நிகழ்ச்சியில் நடைபெற்ற, 'நடத்தை' என்ற தலைப்பை திரும்பவும் ஒரு முறை பரிசீலனை செய்ததுடன், அவர்கள் நிகழ்ச்சியை ஆரம்பித்தனர். கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே, அப்யாசிகள், முந்தைய சூழ்நிலைகளுக்கான தங்கள் எதிர்ச்செயல்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தனர். ஒவ்வொரு தனிநபரும், தன்னிடம் ஒரு ஆக்கபூர்வமான மாற்றத்திற்கு முயலவேண்டும் என்று உணர்ந்தனர். அகம் மற்றும் புறச்சமநிலையை சாதிக்க தங்களுக்கே இடமளித்து, மற்றவர்களைப் புரிந்துகொள்ளும் திறந்த இதயத்தையும் கொண்டிருக்க வேண்டும். இது அவர்களுக்கு, நிலைமையை நேர்மறையுடன் அணுகவும், சரணாகதியின் உணர்வைப்பெறவும் உதவும். சுருங்கக் கூறினால், "எல்லா நேரங்களிலும், எவ்வித சூழ்நிலைகளிலும், நமது வாழ்க்கையின் தரத்தை மாற்ற, நம்மிடம் சக்தி இருக்கிறது" என்று வெர்னெர் எர்ஹார்ட் கூறுவதைப் போல், குணத்தை மேன்மைப் படுத்தவேண்டும்.

நம் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியிலும் எண்ணங்கள் மற்றும் கருத்துக்களில் மென்மையைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொள்ளவேண்டும் என்ற குறிப்புடன் நிகழ்ச்சி முடிவடைந்தது. இது இலேசான மனநிலையை உருவாக்கி, சலனமற்ற தன்மையையும், அமைதியையும் நம்முள் உறுதிப்படுத்துகிறது.

## சென்னை - இளைஞர் கூட்டம்

### நாட்றாம்பள்ளி ஆசிரமம்



அக்டோபர் 15 மற்றும் 16ம் தேதி, நாட்றாம்பள்ளி ஆசிரமத்தில், 18 முதல் 30 வயது வரையிலான அப்யாசிகளுக்கு, ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டது. 'ஆன்மீகப்பயணம்' என்ற கருத்தைக்கொண்ட அக்கூட்டத்தில், சென்னையிலிருந்து, நாட்றாம்பள்ளிக்குப் பேருந்தில் வந்த 55 ஆர்வமிக்க இளைய அப்யாசிகளும், 5 பிரிபெக்ட்களும் பங்கேற்றனர்.

நாட்றாம்பள்ளியி,ல் கிராமத்தின் வழியே மேற்கொண்ட காலை நடையுடன் நிகழ்ச்சி துவங்கியது. 'ஆன்மீக மாளிகை: மிஷன்' என்ற கருத்துரைக்குப் பின், மாஸ்டரின் பணியைப் பூர்த்தி செய்வதில் அப்யாசியின் பங்கு என்ற கலந்துரையாடல் இடம் பெற்றது. கேளிக்கையுடன், படிப்பினையும் கொண்ட பல்வேறு குழுச் செயல்பாடுகள் நடத்தப்பட்டன. 'மாஸ்டருடன் உறவு' மற்றும் மாஸ்டர் மீதான அன்பை எவ்வாறு மேம்படுத்திக் கொள்வது என்ற பகுதிகள், அவர்களது எண்ணங்களை ஒருங்கிணைத்தன. வேடிக்கையான ஒரு குழு விளையாட்டும், சகஜ மார்க்க இலக்கியத்தின் மீதான ஒரு வினா- விடை நிகழ்ச்சியும் அனைவரையும் உற்சாகப்படுத்தின. ஒவ்வொருவரும், தோட்டத்தில் ஏதாவது ஒரு வேலையில் பங்கு கொண்டதுடன், நிகழ்ச்சி முடிவடைந்தது.

பங்கேற்றவர்களுக்கு, மாஸ்டரின் புகைப்படம் பரிசாக வழங்கப்பட்டது. ஆசிரமத்தின் ஆன்மீகச் சூழலில் அவர்கள் களிப்புற்றனர். நாட்றாம்பள்ளி ஆசிரமத்தின் அமைதியான சூழலில் நடந்த இந்நிகழ்ச்சியால், சக்தியும், புத்துணர்வும் பெற்றதை உணர்ந்தனர்.







## மனித ஒருங்கிணைப்பிற்கான பயிற்சி முகாம் குவாலியர், மத்திய பிரதேசம்

அக்டோபர் 14 முதல் 16 ம் தேதி வரை, குவாலியர் மையத்தில், மனித ஒருங்கிணைப்பிற்கான மூன்று நாள் முகாம் ஒன்று, மண்டல அளவில், 54 பயிற்சி பெறுபவர்களுக்காக நடத்தப்பட்டது. 14ம் தேதி, அப்யாசிகள் வர ஆரம்பித்தனர். பதிவுசெய்வதற்கும், தனிப்பட்ட சிட்டிங்குகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மாலை சத்சங்கத்திற்குப்பின், சகோ. நரைன் சிங், அனைவரையும் வரவேற்றார்.

மறுநாள், சகோ. கமல் வாத்வா, சகோ. யோகேஷ் காண்டேல்வால், மற்றும் ஹொஸங்காபாத்தைச் சேர்ந்த சகோ. ராம் கிஷோர் ஆகியோர், "ஒரு உலகம், ஒரே மனித இனம்" என்ற தலைப்பில், அகில உலக சகோதரத்துவத்தை மேம்படுத்துவதற்காக, ஒரு நிகழ்ச்சியை நடத்தினர். போபாலைச் சேர்ந்த, சகோ. R.K.ஸ்ரீவாத்சவாவும் அவரது குழுவினரும்,"குண உருவாக்கம்" என்ற பொருளில் ஒரு நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்களாகவும், மற்றும், பங்கேற்பாளர்கள் தங்களுள் ஆழ்ந்து செல்ல உதவுவதாகவும் இருந்தன. மாலையில், தனி சிட்டிங்குகளும், சத்சங்கமும், 9 மணி பிரார்த்தனைக்குப் பின் ஒரு கலை நிகழ்ச்சியும் இருந்தன.

16ம் தேதி, காலை சத்சங்கம் முடிந்தவுடன், சகோ. ஷிரிஷ், "தில் கி ஆவாஸ்- 2007" என்ற புத்தகத்திலிருந்து, சில பக்கங்களைப் படித்தார். மண்டலப்பொறுப்பாளர், சகோ. விகல்ப், அப்யாசிகளை ஊக்குவிக்கும் வண்ணம் உரையாற்றினார். பங்கேற்றவர்கள், ஆசிரம கட்டிடம் கட்ட ஆரம்பித்ததைக் கண்டனர். குவாலியரைச் சேர்ந்த, சகோ. ஷிவ் குமார் குழுவினரின், "அவரோடு இணைப்பை வளர்த்துக்கொள்ளுங்கள்" என்பது, நிகழ்ச்சியின் கடைசிப் பகுதியாக இருந்தது. சகோ. ஷிவ்குமார், சகோ. மனு சோப்ரா, சகோதரிகள் அர்ச்சனா மற்றும் வந்தனா ஆகியோர், நிகழ்ச்சியைத் தொகுத்து அளித்தனர்.

## குழந்தைகள் நிகழ்ச்சி

### பரேலி, உத்தரப் பிரதேசம்

பரேலி மையத்தில், நவம்பர் 14-16 வரை, குழந்தைகளுக்காக (10-16வயது), 3 நாள் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. டாக்டர் G.M. பட்நாகர், நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து, நமது பண்டைய நூல்களிலிருந்து, நன்னெறிகளை மீண்டும் கொண்டு வருவது பற்றிப் பேசினார். ஒவ்வொரு நாளும், மிஷன் பிரார்த்தனையுடன் தொடங்கிய இந்த நிகழ்ச்சி, பிற்பகல் 3-6 மணி வரை நடந்தது. 'சுய விழிப்புணர்வும் சுய நிர்வாகமும்', 'நாம் அனைவரும் ஒன்றே', ஆரோக்கியமும் நல்லிணக்கமும்', மற்றும் 'உண்மையும் தைரியமும்' ஆகிய தலைப்புகளில் உரைகள் இருந்தன. இந்த 3நாட்களிலும், வரைதல், வண்ணம் தீட்டுதல், வினா- விடை மற்றும் பாட்டு ஆகிய செயல்பாடுகள், சகோதரர்கள் சஞ்ஜீவ், ப்ரவீன், ரவீந்திரா, சகோதரிகள் பிமலா, சஷி மற்றும் பல தன்னார்வத் தொண்டர்களின் உதவியுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ரயில்வே பாதுகாப்பு படையின் (RPF)செயல்படும் விதம், ஆரோக்கியம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள், பொருள் வழங்கும் இயந்திரம்(vending machine) மற்றும் அதன் பயன்பாடுகள், போன்றவற்றின் மீதான உரைகள், குழந்தைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தன. நமது தேசத்தின் மீதான அன்பு, தேசப்பற்று, தேசிய கீதத்தின் பிறப்பிடம், மரியாதை, தைரியம், தலைமைப்பண்பு, மற்றும் நன்னெறிகள் ஆகிய விஷயங்களை, நன்கு திருத்தி அமைக்கப்பட்ட படத்துண்டுகளின் மூலம், கர்னல் நிதீஷ் தொகுத்தளித்தார். இவைகள், அனைவரின் இதயங்களையும் தொட்டன. மொத்தத்தில், குழந்தைகளை ஊக்குவித்து, ஆர்வத்தைத் தூண்டும் விதத்தில் நிகழ்ச்சி இருந்தது.

## விளையாட்டு நாள் புனே, மகராஷ்ட்ரா

அக்டோபர் 8ம் - 9ம் தேதிகளில், நான்டெட் பாடா ஆசிரமத்தில், சகோ. ராம்நாத், முயற்சி எடுத்து வெவ்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளை அமைத்து, ஒரு வியக்கத்தக்க வார இறுதிக்கு ஏற்பாடு செய்திருந்தார். முதல் நாள் இளைஞர்களுக்காகவும் (18-30) இரண்டாவது நாள், குழந்தைகள் மற்றும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்காகவும் இருந்தது.

சுவரொட்டிகள், பல்வேறு விளையாட்டுகள் விளையாடும் மாஸ்டருடைய புகைப்படங்கள், மேற்கோள்கள் மற்றும் பலூன்கள் எல்லாம் தயாராக இருந்தன. அதிக உற்சாகத்துடனும், சக்தியுடனும், சனிக்கிழமையன்று, கிரிக்கெட்டு விளையாட்டு தொடங்கியது. இந்த போட்டி, அடுத்த விளையாட்டுக்களை எளிதாக நடத்த, ஒரு ஆரம்பமாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து, லெமன் ரேஸ், புக் பேலன்ஸிங் ரேஸ், கேரம், செஸ் போன்றவை விளையாடப்பட்டன. தன்னார்வ தொண்டர்களால் தயாரிக்கப்பட்ட சிற்றுண்டியும், மதிய உணவும் எல்லோருக்கும் இளைப்பாறுவதற்கு உதவியாய் இருந்தன.

ஞாயிற்றுக்கிழமை, சத்சங்கம் முடிந்ததும், அதே விளையாட்டுக்கள், 30 வயதைக் கடந்தவர்களால் விளையாடப்பட்டன. இந்த செயல்பாடுகள், அப்யாசிகளிடையே விளையாட்டுத் திறனை ஊக்குவித்து, எல்லோரிடையிலும், ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் கொண்டு வந்தன.



### திருப்பூர், தமிழ் நாடு

நவம்பர் 14ம் தேதி, திருப்பூர், செட்டிப்பாளையம் ஆசிரமத்தில், குழந்தைகள் தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அக்கம் பக்கத்திலிருந்து, அதிக பட்சமாக குழந்தைகள் பங்கேற்பதை உறுதி செய்யும் வண்ணம், நிகழ்ச்சிக்கான அழைப்பிதழ்கள் முன்னதாகவே எல்லோருக்கும் விநியோகிக்கப்பட்டன.

அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்க, குழந்தைகளின் வயதுக்கேற்ற விளையாட்டுப் போட்டிகளுடன், மாலை 5 மணிக்கு, நிகழ்ச்சி தொடங்கியது. சகஜ மார்க்கத்தைப் பற்றியதான, அன்பு, ஒழுக்கம், நன்னெறி ஆகியவற்றைப் பற்றிய கேள்விகளைக் கொண்ட, ஒரு சிறப்பு வினா-விடை நிகழ்ச்சியை, சகோ.சுந்தரேசன் நடத்தினார். மண்டலப் பொறுப்பாளர் சகோ. T.V. விஸ்வநாத ராவ், ஆசிரம மானேஜர் சகோ. சுப்பு ரத்தினம், சகோ. மாரப்பன், சகோதரி சரளா ஆகியோர் குழந்தைகள் அனைவருக்கும் பரிசுகளை வழங்கினர். அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது. தங்கள் குழந்தைகளுடன் வந்திருந்த பெற்றோர்கள், மிஷனின் செயல்பாடுகளைப் பாராட்டினர். ஒரு சிலர், பயிற்சியை ஆரம்பிக்க விருப்பம் தெரிவித்தனர். ஆன்மீகச் சூழலில் நடக்கும் இத்தகையதொரு நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்த பலர், இது போன்ற நிகழ்ச்சிகள், எதிர்காலத்தில் அடிக்கடி நடத்தப்படவேண்டும் என்று கூறினர்.

# முழுநாள் நிகழ்ச்சிகள்


கடப்பா


மங்களூர்

## ஆந்திரப்பிரதேசம், கடப்பா

மையத்தில், 2011, டிசம்பர் 4ம் தேதி அன்று, ஒரு முழுநாள் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் 31 அப்யாசிகள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். 'கான்ஸ்டன்ட் ரிமெம்பரன்ஸ்' சமீபத்திய இதழில், வெளியாகி இருந்த இரண்டு கட்டுரைகளான, 'குண உருவாக்கம்' மற்றும் 'உண்மையான சாதனா' (பயிற்சி) ஆகியவை பற்றியதாக அந்நிகழ்ச்சி இருந்தது. கலந்துரையாடல்கள், பிராந்திய மொழியான தெலுங்கில் இருந்ததால், ஆங்கிலம் புரிந்து கொள்ள முடியாதவர்களும், இந்நிகழ்ச்சி மூலமாக, அதிக அளவில் பயனடைந்ததாக அப்யாசிகள் உணர்ந்தனர்.

சகஜமார்க்கத்தின் முக்கியத்துவத்தை அனைவருடனும் பங்கிட்டுக் கொள்வதன்மூலம், வாழ்க்கையின் குறிக்கோளை அடைய அனைத்து சகோதர, சகோதரியருக்கும் ஒரு வாய்ப்பை வழங்கும் கருத்தினை வெளிப்படுத்தும் வண்ணம், குழந்தைகள் நடத்திய ஒரு நாடகத்துடன் அந்நாள் முடிவடைந்தது.

## மங்களூர், தென்கர்நாடகா

மங்களூர் மையத்தில், 2011, டிசம்பர் 4ம் தேதி அன்று, 'என் மாஸ்டர்' என்ற கருத்தைக்கொண்ட ஒரு முழு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. தங்களைத் தயார் செய்துகொள்ளும்படி, அப்யாசிகளுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாகவே கூறப்பட்டது. சத்சங்கத்திற்குப் பின், மாஸ்டரது உரையின் ஒரு குறுந்தகடு போடப்பட்டது. தயாராக வந்திருந்த அப்யாசிகள், 'என் மாஸ்டர்' புத்தகத்திகுப் பொருத்தமான பல்வேறு தலைப்புக்களில் உரையாற்றினர். பிற்பகல், மணப்பாக்கத்தில் நடந்த, ஐரோப்பிய கருத்தரங்கின் வீடியோ காட்சி காண்பிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, மும்பை மையத்தைச் சேர்ந்த இரு இளம் அப்யாசிகளால், 'சத்சங்கத்தின்' முக்கியத்துவம் பற்றிய ஒரு பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

நிகழ்ச்சி, பிரார்த்தனையுடன் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின், அப்யாசிகள் ஜோடிகளாகப் பிரிக்கப்பட்டு, முறையாக சத்சங்கத்தில் பங்கேற்க முடியாததன் காரணங்களைப் பற்றி ஆராயும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். பின்பு அதை, முழுக் குழுவுடனும் பகிர்ந்து கொண்டனர். சத்சங்கத்தின் முக்கியத்துவத்தைப்பற்றிய மாஸ்டரின் மேற்கோள்கள் திரையிடப்பட்டன. அதனைத் தொடர்ந்து, சுய சோதனையும், கலந்துரையாடல்களும் இருந்தன.

## விருதுநகர், தமிழ்நாடு

அக்டோபர் 16ம் தேதி, விருதுநகர், சின்னவல்லிக்குளம் ஆசிரமத்தில், நடைபெற்ற முழு நாள் நிகழ்ச்சிகளுக்காக, உள்ளூர் மற்றும் அருகிலிருந்த மையங்களைச் சேர்ந்த சுமார் 40 சகோதர, சகோதரியர் ஒன்றுகூடினர். காலை 7.30 மணிக்கு சத்சங்கமும், அதன்பின்பு காலை உணவும் முடிந்தவுடன், நிகழ்ச்சியைத் தொடங்க அப்யாசிகள் மிக்க ஆர்வத்துடன் இருந்தனர். முந்தின மாதம் நடைபெற்ற முழுநாள் நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக, அப்யாசிகள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் "மேலான அப்யாசியாக உங்களை மாற்றிக்கொள்ளுங்கள்" என்ற தலைப்பில் கலந்துரையாடினர். கலந்துரையாடலின்முடிவில், குழுத் தலைவர்கள், சிறப்பான விவரங்களைச் சுருக்கிக் கூறினர்.

இந்தக் கலந்துரையாடலின் போது, பல முக்கிய விவரங்கள் வெளிவந்தன. இந்நிகழ்ச்சியில் மாஸ்டரின் பிரசன்னத்தையும், வழிகாட்டுதலையும் உணர்ந்ததாக அப்யாசிகள் பலரும் தெரிவித்தனர். அந்த முழு நாள் நிகழ்ச்சி, மாலை சத்சங்கத்துடன் முடிவடைந்தது.

## ஹுப்ளி, வடகர்நாடகா

நவம்பர் 13ம் தேதி, இளைஞர்கள் உருவாக்கி, பயிற்சி செய்து, காட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. சத்சங்கம் மற்றும் காலை உணவிற்குப்பின், அப்யாசிகளுக்கும், ஆன்மீகத் தேடல் உள்ளவர்களுக்கும் நடைபெறுவதைப் போலான ஒரு போலியான விவாதம் இருந்தது. இரண்டுமணி நேரம் நடைபெற்ற அவ்விவாதம், நகைச்சுவையோடும், பொழுது போக்காகவும் மற்றும் படிப்பினை ஊட்டுவதாகவும் இருந்தது.

நம் அமைப்பிற்குத் தொடர்பில்லாத சில ஒளிப்படத்தகடுகள் (slides) காட்டப்பட்டன. குழுக்களாகப்பிரிந்து, அந்த ஒளிப்படத்தகடுகளுக்கு ஏற்ற முத்திரைச் சொல்லை சகஜ மார்க்கத்திலிருந்து தேர்ந்தெடுத்து, புதியதாகச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். மதிய உணவிற்குப்பின்பு, இளைஞர்களால் நடித்துக்காட்டப்பட்ட ஒரு குறுநாடகம், பல்வேறு மதங்களையும் நிறுவியவர்கள், ஒரே விஷயங்களைத் தான் கூறியிருக்கிறார்கள் என்ற உண்மையை முன்வைத்தது. அதனுடன், காட்சியமைப்புகளும், பின்னணி இசையும் இணைந்திருந்தன. அனைவரும் நிகழ்ச்சியைக் கண்டுகளித்தனர்.

## பெல்லாரி, வட கர்நாடகா

நவம்பர் 6ம் தேதி அன்று, சத்சங்கத்திற்குப்பின், அப்யாசிகளும், குழந்தைகளும், சுருஸ்தி தோட்டத்திற்குச் சென்றனர். கரக்பூர் க்ரெஸ்டில் நடந்த, குண உருவாக்கம் பயிற்சி நிகழ்ச்சியில் (தெலுங்கு) பங்கேற்றிருந்த மூன்று அப்யாசிகள், அந்நிகழ்ச்சியைப் பற்றியும், பயிற்சி நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் முக்கியத்துவம் பற்றியும் விளக்கினர். அதன்பின், தேர்ந்தெடுத்துப் பேசும் நிகழ்ச்சியில் அப்யாசிகள் கலந்து கொண்டனர். மதிய உணவிற்குப் பின், குழந்தைகளால் ஒருவினாவிடை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, குழந்தைகளின் கலை நிகழ்ச்சி ஒன்றும் இருந்தது. மாலை 4 மணிக்கு நடைபெற்ற சத்சங்கத்துடன் நிகழ்ச்சி முடிவடைந்தது.



விருதுநகர்


பெல்லாரி



## லய யோகா ஆசிரமத்தின் துவக்கவிழா

சாரநாத், வாரணாசி

2011, டிசம்பர் 4ம் தேதி, வாரணாசி, சாரநாத்தில் உள்ள லய யோகா ஆசிரமத்தின், புதிதாகக் கட்டப்பட்டுள்ள தியானக்கூடத்தை, சென்னைக்கும் வாரணாசிக்கும் இடையே உள்ள வீடியோ தொடர்பு மூலமாக மாஸ்டர் துவக்கி வைத்தார். காரியதரிசி சகோ. உமா சங்கர் பாஜ்பாய், நீதிபதி R.R.K. சதுர்வேதி, சகோ. ஆஷீஷ் சிங், சகோ. A.K. கர்க் மற்றும் சகோ. Y.N. பிரசாத் ஆகியோர் பங்கேற்றனர்.

காலை 6.30 மணிக்கு, சுமார் 1000 அப்யாசிகள், தியானக்கூடத்தில் கூடினர். மாஸ்டர் திரையில் தோனறியவுடன், கூடம் முழுவதும் பலத்த கைதட்டலால் நிறைந்தது. அனைவரும், மாஸ்டரைக் காண, மிக்க மகிழ்ச்சியடைந்தனர். அலங்கார உலோகத் தகட்டின் திரைச்சிலையை நீக்குமாறு சகோ. பாஜ்பாய்க்கு கூறிய மாஸ்டர், அந்தத்தியானக் கூடத்தை பாபுஜி மகராஜுக்கு அர்ப்பணித்து, அந்தக் கூடத்தை தியானம் செய்ய உபயோகிக்குமாறு, அப்யாசிகளுக்கு அனுமதி வழங்கினார். "சகஜமார்க்கம் அன்பின் வழியாகும். நாம் இந்த இடத்தை நம் ஆன்மீக மேம்பாட்டிற்காகப் பயன்படுத்த வேண்டும். சகஜமார்க்கத்தில் வெறுப்பு என்பதற்கு இடமே இல்லை" என்று அவர் கூறினார். வீடியோ மூலமான தொடர்பு முறை பற்றிக் கூறும்போது, இந்த விஞ்ஞான யுகத்தில், நாம் தனித்தனியே இல்லை, நாம் அனைவரும் ஒன்று என்று குறிப்பிட்டார்.

வாரணாசி மையத்தின் மையப் பொறுப்பாளர், டாக்டர் பிரசன்ன குமார், அனைவரையும் வரவேற்று, மாஸ்டர் ஆசி வழங்கியதற்கு நன்றி கூறினார். சகோ. பாஜ்பாய், அன்பின் முக்கியத்துவத்தை விவரமாகக் கூறினார். சகோ. N.P. சின்ஹா, லய யோகா ஆசிரமத்தின் சரித்திரத்தைச் சுருங்கக் கூறினார். இரண்டாவது பகுதியில், மற்ற மையங்களைச் சேர்ந்த அப்யாசிகள் உரையாற்றினர். இதனைத் தொடர்ந்து ஒரு கலை நிகழ்ச்சியும் சத்சங்கமும் இருந்தன.

# அறிவிப்புகள்

## சென்னையின் புதிய மையப் பொறுப்பாளர்

சென்னை தற்போது, ஒரு புதிய மண்டலமாக (2C) இருக்கும். சகோ. கேப்டன் வினித் சிங் ரானாவத் புதிய மையப் பொறுப்பாளராக இருப்பார்.

## எக்கோஸ் செய்தி மடலுக்கான புதிய மொழிபெயர்ப்பாளர்கள்

ஆங்கிலத்திலிருந்து, எக்கோஸ் இந்தியா செய்திமடல் வெளியிடப்படும் பிராந்திய மொழிகளில் எதேனும் ஒன்றுக்கு மொழியாக்கம் செய்ய நீங்கள் விரும்பினால், தயவுசெய்து, in.newsletter@srcm.org என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

## சந்தாவிற்கான மின்னஞ்சல் முகவரி


செய்திமடல்களை நாங்கள் அனுப்பும்போது, Yahoo மற்றும் Rediffmail இணைப்புகளில் எங்களுக்குப் பிரச்சனைகள் உள்ளன என்பதை தயவுசெய்து கவனிக்கவும். நீங்கள், செய்திமடல் சந்தாவிற்கு Yahoo அல்லது Rediffmail ID யில் பதிவு செய்திருந்தால், தயவு செய்து அப்பதிவை நிக்கிவிட்டு, வேறொரு மின்னஞ்சல் முகவரியில் திரும்பவும் பதிவு செய்யவும். இந்த அசௌகரியத்திற்கு நாங்கள் வருந்துகிறோம்.

## மணப்பாக்கப் பயணம்


2012, ஜனவரி 17முதல் 24வரை, ருஷ்யா மற்றும் முன்னாள் CIS நாடுகளின் அப்யாசிகளுக்கான கருத்தரங்கு ஒன்று, மணப்பாக்கம் பாபுஜி மெமோரியல் ஆசிரமத்தில் நடக்கவிருக்கிறது. இதை கருத்தில் கொண்டு, மற்ற மையங்களின் அப்யாசிகள், மேற்கூறிய தேதிகளில் மணப்பாக்கம் ஆசிரமத்திற்கு வருகை புரிவதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# புதிய வெளியீடுகள்


மதிப்புக்குரிய மாஸ்டர் அவர்கள், மணப்பாக்கத்தில் புத்தாண்டு தினத்தன்று கீழ்க்கண்டவற்றை வெளியிட்டார்.





2010 டிசம்பரில் மணப்பாக்கத்தில் நடைபெற்ற, ஐரோப்பிய கருத்தரங்கு மிக அழகாகப் படம் பிடிக்கப்பட்டு, Heaven (DVD) என்ற பெயரில், ஸ்பிரிசுவல் ஹயரார்க்கி பப்ளிகேஷன் டிரஸ்டின் ஒரு சிறப்புத் தயாரிப்பாக, புதிய வெளியீடாக வந்துள்ளது.





சகஜ மார்க்க கோட்பாடுகள் பாகம் 12 தமிழ்



ப்ரின்ஸிபில்ஸ் ஆப் சகஜ மார்க் பாகம் 14 தெலுங்கு




ஹார்ட் ஸ்பீக் 2002 பாகம் 2 ஆங்கிலம்




ஃப்ருட் ஆப் தி ட்ரி மராத்தி

# புனே ஆசிரமம்

## ஒளி மையம்

"மகிழ்ச்சி- நாம் கண்டிப்பாக மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். ஒரு அப்யாசி, சிறப்பான தருணங்களில் மட்டுமல்லாமல், உங்கள் முன் இருக்கும் பன்ஷெட் ஏரி, நீங்கள் பார்க்கும் ஒளிமயமான சூரிய அஸ்தமனம் ஆகியவைகளால் ஏற்படும் குறுகிய கால சந்தோஷத்தால் மட்டுமல்லாமல், எல்லா சமயங்களிலும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். உண்மையில் நாம் இயற்கையை நேசிப்பவர்கள். நம் இதயங்களில் இருக்கும் உள் இயற்கையை நேசிக்க வேண்டும். புற இயற்கை, அதன் பிரதிபலிப்பு மட்டுமே. அல்லது, உள்ளே இருந்தால் மட்டுமே, அது பிரதிபலிப்பாக இருக்க முடியும்".




புனேயிலும், அதைச் சுற்றிலும், சகஜ மார்க்கக் குடும்பம் வளரத் தொடங்கிய போது, ஒரு ஆசிரமத்தின் தேவை உணரப்பட்டது. 2001ம் வருடம், ஆசிரமத்தின் கட்டுமான திட்டம் ஒன்று, மாஸ்டரிடம் வழங்கப்பட்டது. அவர் அதனை உடனடியாக ஏற்றுக்கொண்டார்.

2001,ஜனவரியில், நிலப்பதிவு செய்யப்பட்டது. ஆசிரம வசதிகளைக் கட்டும் பணி, 2004 ம் ஆண்டு முற்பகுதியில் முடிக்கப்பட்டது. (குழந்தைகள் மையத்தின் குடில் மட்டும், 2004, ஜூலையில் நிறைவடைந்தது.) ஆசிரமம், சின்ஹாகாட் சாலை அருகில், 3919 சதுர மீட்டர் பரப்பளவில், ஒரு அமைதியான பகுதியில் உள்ளது.



ஆசிரமத்தின் அருகில் உள்ள ஒரு நீர்நிலையால், சூழல் குளிர்ச்சியாகவும், அமைதியாகவும் இருக்கிறது. புனே ரயில் நிலையத்திலிருந்து 15கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஆசிரமத்தை, சாலை மற்றும் பொது போக்குவரத்து மூலமும் அடைய முடியும்.

பன்ஷெட் ரிடிரீட் மையத்திலிருந்து, நான்டெட் ஆசிரமம் 10 கி.மீ. தொலைவிலேயே அமைந்துள்ளதால், தன்னார்வத் தொண்டர்களும், அப்யாசிகளும் எளிதாகப் போய் வர வசதியாக உள்ளது.

2004, பிப்ரவரியில், ஆசிரமத்திற்கு வருகை புரிந்திருந்த மாஸ்டர், முடிவுறும் தருவாயில் இருந்த கட்டிட வேலைகளைப் பார்த்திருந்தார். கட்டிட வேலை முடிந்த உடனேயே, சத்சங்கங்கள் ஆரம்பிக்கும்படி, மையப்பொறுப்பாளருக்கு அவர் அறிவுறுத்தினார். எனவே, முதல் சத்சங்கம், 2004, ஏப்ரல் 4ம் தேதி நடத்தப்பட்டது.




ஆசிரமத்தில், சுமார் 250 அப்யாசிகள் அமரக்கூடிய, 2325 சதுர அடி பரப்புள்ள ஒரு தியானக் கூடம் உள்ளது. 2009ம் ஆண்டில், மேலும் 200 அப்யாசிகள் அமரும் வண்ணம், ஒரு தற்காலிக நீட்டிப்பு அமைக்கப்பட்டது. ஒரு சமையலறை, குழந்தைகள் மையம், ஒரு கழிப்பறைத் தொகுதி (முதல் தளத்தில் மேற்பார்வையாளரின் அறையுடன்) மற்றும் கார்கள் நிறுத்தும் இடம் ஆகியவை மற்ற வசதிகள் ஆகும். கட்டிடங்களைச் சுற்றி, பச்சைப் பசுமையான புல்வெளிகளும், பலவிதமான பழ மரங்களும் உள்ளன.

மாஸ்டர், புனேக்கு வருகை புரிந்த பலமுறைகளில், இந்த ஆசிரமத்தில் சத்சங்கம் நடத்தி இருக்கிறார். எதிர்கால வளர்ச்சிக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில், ஆசிரம வசதிகளை விரிவாக்க, ஆசிரம பராமரிப்புக் குழு, ஒரு பெரும் திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. அது ஒப்புதலுக்காக, மாஸ்டரிடம் அளிக்கப்படும்.







**To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**

© 2011 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.